பெராஞ்சர் : நான் உன்னைக் காதலிக்கிறேன்.

டெய்ஸி : நீ சொன்னதையே திருப்பித்திருப்பிச் சொல்கிறாய், கண்ணே.

பெராஞ்சர் : கேள், டெய்ஸி! நம்மால் ஏதேனும் செய்ய முடியும். நாம் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம். நமது குழந்தைகள் மேலும் சந்ததிகளைப் பெறுவார்கள். அதற்குக் காலம் ஆகும். இருந்தாலும், நாம் இருவருமாகவே, மனித இனத்தை மீண்டும் உருவாக்கலாம்.

டெய்ஸி : மீண்டும் மனித இனத்தை உருவாக்கலாம்?

பெராஞ்சர் : அது ஏற்கெனவே நடந்திருக்கிறது.

டெய்ஸி : அந்தக் காலத்தில். ஆதாமும் ஏவாளும்... அவர்களுக்கு நிறையத் துணிவிருந்தது.

பெராஞ்சர் : நாம்கூட, நாமும் துணிவுகொள்ள முடியும். மேலும் அவ்வளவு துணிவும் தேவையில்லை. காலம் செல்லச் செல்ல அது தானாகவே நடக்கும், பொறுமையாக இருந்தால்.

டெய்ஸி : என்ன புண்ணியம்?

பெராஞ்சர் : ஆமாம், ஆமாம், கொஞ்சம் துணிவு. ரொம்பக் கொஞ்சம்.

டெய்ஸி :எனக்குக் குழந்தைகள் பெற்றுக்கொள்ள விருப்பமில்லை. அது எனக்குச் சலிப்பூட்டுகிறது.

பெராஞ்சர் : அப்படியானால் எப்படித்தான் உலகத்தைக் காப்பாற்ற விரும்புகிறாய்?

டெய்ஸி : எதற்காக அதைக் காப்பாற்ற வேண்டும்?

பெராஞ்சர் : என்ன கேள்வி... எனக்காக அதைச் செய், டெய்ஸி. உலகத்தைக் காப்பாற்றுவோம், வா...

டெய்ஸி : சொல்லப்போனால், ஒருவேளை காப்பாற்றப்பட வேண்டியவர்கள் நாமாகவே இருக்கலாம். இயற்கைக்கு விரோதமானவர்கள் நாம்தானோ என்னவோ?

பெராஞ்சர் : நீ தொடர்பில்லாமல் பேசுகிறாய், டெய்ஸி. உனக்குக் காய்ச்சல் வந்திருக்கிறது.

டெய்ஸி : நமது இனத்தைச் சேர்ந்தவர்கள் வேறு யாராவது உன் கண்களில் படுகிறார்களா?

பெராஞ்சர் : டெய்ஸி! நீ அப்படி பேசுவதைக் கேட்க எனக்குப் பிடிக்கவில்லை.

*(டெய்ஸி எல்லாப் பக்கங்களிலும் பார்க்கிறாள். சுவரின் மீதும் படிக்கட்டின் மேல்தளக் கதவிலும், படிக்கட்டின் கைப்பிடிச்சுவர், இசைக்குழுப் பள்ளத்தின் விளிம்பெங்கும் தோன்றும் காண்டாமிருகங்களைப் பார்க்கிறாள்.)*

டெய்ஸி : மக்கள் என்பது அவ்வளவுதான்! அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதுபோல் தோன்றுகிறது. அவர்கள் இருக்கும் நிலையில் இயல்பாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் பைத்தியம் பிடித்தவர்கள்போல் காணப்படவில்லை. அவர்கள் மிக இயல்பாக இருக்கின்றனர். காரணத்துடன்தான் இப்படி இருக்கின்றனர்.

பெராஞ்சர் : *(கைகளைச் சேர்த்து வைத்துக்கொண்டு டெய்ஸியை நம்பிக்கையற்றவனாகப் பரிதாபமாகப் பார்க்கிறான்.)* நாம் சரியானவர்கள் டெய்ஸி! நான் உனக்கு நிச்சயமாகச் சொல்கிறேன்!

டெய்ஸி : ரொம்பவும் தெரிந்த மாதிரிதான்...

பெராஞ்சர் : நான் சொல்வது சரியென்று உனக்கு நன்றாகத் தெரியும்.

டெய்ஸி : முழுக்கவும் சரியென்று எதுவுமில்லை. இந்த உலகம்தான் சரி. நீயுமல்ல நானுமல்ல.

பெராஞ்சர் : ஆமாம், டெய்ஸி! நான் சொல்வதுதான் சரி. நான் உன்னிடம் பேசும்போது நீ என்னைப் புரிந்துகொள்வதுதான் அதற்கான நிரூபணம்.

டெய்ஸி : அது எதையும் நிரூபிக்கவில்லை.

பெராஞ்சர் : ஒரு ஆண் ஒரு பெண்ணை எவ்வளவு நேசிக்க முடியுமோ, நான் உன்னை அவ்வளவு நேசிக்கிறேன் என்பதுதான் நிரூபணம்.

டெய்ஸி : வேடிக்கையான வாதம்.

பெராஞ்சர் : என்னால் உன்னை இப்போது புரிந்துகொள்ள முடியவில்லை, டெய்ஸி, எனதன்பே, நீ என்ன கூறுகிறாய் என்று இப்போது உனக்கே தெரியவில்லை. காதல், காதல் நினைத்துப்பார், காதல்...

டெய்ஸி : நீ காதல் என்று அழைக்கிறாயே, நோயுற்ற அந்த உணர்வுபற்றி எனக்குச் சற்று அவமானமாக இருக்கிறது. அது ஆணின் பலவீனம், பெண்ணின் பலவீனமும்தான்! நம்மைச் சுற்றியுள்ள இந்த உயிர்களிலிருந்து வெளிப்படும் மனவெழுச்சியோடு, அசாதாரணமான சக்தியோடு அதை ஒப்பிட முடியாது.

பெராஞ்சர் : சக்தி? உனக்குச் சக்தி வேண்டுமா? இந்தா, எடுத்துக்கொள் சக்தியை.

*(அவன் அவளை அறைகிறான்.)*

டெய்ஸி : ஓ! இப்படி நடக்கும் என்று ஒருபோதும் நான் நினைக்கவில்லை...

*(அவள் நாற்காலியில் சாய்கிறாள்.)*

பெராஞ்சர் : ஓ! என்னை மன்னித்துவிடு எனதன்பே, என்னை மன்னித்துவிடு. *(அவன் அவளைக் கட்டியணைக்கப்போகிறான். அவள் தன்னை விடுவித்துக்கொள்கிறாள்.)* என்னை மன்னித்துவிடு, எனதன்பே! நான் வேண்டுமென்றே செய்யவில்லை. எனக்கு என்ன ஆயிற்றென்றே தெரியவில்லை. என்னால் எப்படி இம்மாதிரி நிலை இழக்க முடிந்ததென்றே தெரியவில்லை.

டெய்ஸி : ஏனென்றால், உன்னிடம் வாதங்கள் வற்றிவிட்டன, அவ்வளவுதான்.

பெராஞ்சர் : ஆக, ஒரு சில நிமிடங்களில் நாம் இருபத்தைந்து வருடத் திருமண வாழ்க்கையை வாழ்ந்துவிட்டோம்.

டெய்ஸி : எனக்கு உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. உன்னை எனக்குப் புரிகிறது.

பெராஞ்சர் : *(டெய்ஸி அழுதுகொண்டிருக்கும்போது)* சரி, ஒருவேளை என்னிடம் வாதங்கள் வற்றியிருக்கலாம். என்னைவிட, நம்மைவிட அவை வலிமை வாய்ந்தவை என்று நினைக்கிறாய் போலும்.

டெய்ஸி : நிச்சயமாக.

பெராஞ்சர் : சரி, எது எப்படியிருந்தாலும் சத்தியமாகச் சொல்கிறேன். நான் சரணடையமாட்டேன், நான் சரணடையமாட்டேன்.

டெய்ஸி : *(எழுந்து பெராஞ்சரை நோக்கிப் போகிறாள். அவனுடைய கழுத்தைக் கட்டிக்கொள்கிறாள்.)* பாவம் நீ, இறுதிவரை நான் உன்னுடன் சேர்ந்து போராடுவேன்.

பெராஞ்சர் : உன்னால் முடியுமா அது?

டெய்ஸி : நான் வாக்கைக் காப்பாற்றுவேன். நம்பிக்கை கொள். *(காண்டாமிருகங்களின் சத்தங்கள்)* அவை பாடுகின்றன. உனக்குத் கேட்கிறதா?

பெராஞ்சர் : அவை பாடவில்லை. பிளிறுகின்றன.

டெய்ஸி : அவை பாடுகின்றன.

பெராஞ்சர் : அவை பிளிறுகின்றன, நான் சொல்கிறேன்.

டெய்ஸி : உனக்குப் புத்தி சரியில்லை, அவை பாடுகின்றன.

பெராஞ்சர் : அப்படியானால், உனக்கு இசையை ரசிக்கும் செவியில்லை.

*டெய்ஸி : இசையைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது. பரிதாபத்துக்குரிய என் நண்பனே! பார், அவை விளையாடுகின்றன. அவை நடனமாடுகின்றன.*

*பெராஞ்சர் : அதை நடனமென்றா சொல்கிறாய்?*

*டெய்ஸி : அது அவற்றின் பாணி. அவை அழகாக இருக்கின்றன!*

*பெராஞ்சர் : அவை இழிவானவை.*

*டெய்ஸி : அவற்றைப்பற்றிக் கன்னாபின்னாவென்று யார் சொன்னாலும் எனக்குப் பிடிக்காது. அது எனக்கு வருத்தத்தைத் தருகிறது.*

*பெராஞ்சர் : என்னை மன்னித்துவிடு. நாம் சச்சரவிட்டுக்கொள்ள அவை காரணமாக இருக்க வேண்டாம்.*

*டெய்ஸி : அவை தெய்வங்கள்.*

*பெராஞ்சர் : நீ மிகைப்படுத்துகிறாய், டெய்ஸி. அவற்றை நன்றாகப் பார்.*

*டெய்ஸி : பொறாமைப்படாதே, என் அன்பே என்னையும் மன்னித்துவிடு.*

*(அவள் மீண்டும் பெராஞ்சரை நோக்கிப் போகிறாள், அவனைக் கட்டிக்கொள்ள முனைகிறாள். இப்போது பெராஞ்சர்தான் தன்னை விடுவித்துக்கொள்கிறான்.)*

*பெராஞ்சர் : நமது கருத்துகள் முற்றிலும் நேர்மாறாக இருக்கின்றன. அவற்றைப்பற்றி மேலும் விவாதிக்கமாலிருப்பது நல்லது.*

*டெய்ஸி : அற்பத்தனமாக இருக்காதே. இங்கே பார்!*

*பெராஞ்சர் : மடத்தனமாக இருக்காதே.*

*டெய்ஸி : (தனக்கு முதுகைக் காட்டியவாறு திரும்பிக் கண்ணாடியில் உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கும் பெராஞ்சரிடம்) சேர்ந்து வாழ்வதென்பது இனியும் சாத்தியமில்லை. (பெராஞ்சர் தன்னைத் தானே கண்ணாடியில் உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, ''அவர் நல்லவரல்ல உண்மையிலேயே நல்லவரல்ல'' என்று கூறிக்கொண்டே டெய்ஸி கதவை நோக்கி மெதுவாகப் போகிறாள். படியின் மேலேயிருந்து அவள் இறங்கிப் போவது தெரிகிறது.)*

*பெராஞ்சர் : (கண்ணாடியில் பார்த்துக்கொண்டே) இருந்தாலும் மனிதன் என்பவன் அவ்வளவு கெட்டவனாகத் தெரியவில்லை. இருந்தாலும் மிக அழகானவர்களில் நானும் ஒருவன் என்று சொல்ல முடியாதுதான். இல்லை. என்னை நம்பு டெய்ஸி. (அவன் திரும்புகிறான்.) டெய்ஸி! டெய்ஸி! எங்கே நீ, டெய்ஸி? நீயும் அது மாதிரியே நடந்துகொள்ளாதே. (கதவை நோக்கி விரைகிறான்.) டெய்ஸி! (படிக்கட்டின் மேல்குறட்டிற்கு வந்த பிறகு கைப்பிடிச்சுவரின்மேல் குனிந்து எட்டிப்பார்க்கிறான்.)*

*டெய்ஸி! மேலே வா.திரும்பிவா, என் அன்பே! நீ இன்னும் சாப்பிடக்கூட இல்லை. டெய்ஸி, என்னைத் தன்னந்தனியாக விட்டுவிட்டுப் போய்விடாதே. நீ எனக்கு வாக்களித்திருந்தாயே. டெய்ஸி! டெய்ஸி! (அவளைக் கூப்பிடுவதைக் கைவிட்டு, நம்பிக்கை இழந்ததை வெளிப்படுத்தும் பாவனை காட்டி, தனது அறைக்குத் திரும்புகிறான்.) நாங்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவில்லை என்பது வெளிப்படை. ஒரு உடைந்த வீடு தாங்காது. ஆனாலும், என்னிடம் விளக்கமளிக்காமல் அவள் என்னை விட்டுவிட்டுப் போயிருக்கக் கூடாது. (அவன் சுற்றுமுற்றும் பார்க்கிறான்.) என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் போய்விட்டாள். இது முறையல்ல. நான் இப்போது முற்றிலும் தனித்திருக்கிறேன். (அவன் கதவைக் கவனமாக, ஆனால் கோபமாகப் பூட்டப்போகிறான்.) என்னைப் பிடிக்க முடியாது. (அவன் கவனமாக எல்லா ஜன்னல்களையும் மூடுகிறான்.) உங்களால் என்னைப் பிடிக்கமுடியாது; என்னை. (எல்லாக் காண்டமிருகத் தலைகளையும் நோக்கிச் சொல்கிறான்.) நான் உங்களைப் பின்பற்றமாட்டேன். எனக்கு உங்களைப் புரியவில்லை! நான் எப்படியிருக்கிறேனோ அப்படியே தொடர்ந்து இருப்பேன். நான் ஒரு மனிதப் பிறவி. ஒரு மனிதப் பிறவி. (நாற்காலியில் உட்காரப்போகிறான்.) நிலைமை சற்றும் தாங்க முடியாததாக இருக்கிறது. அவள் புறப்பட்டுப் போய்விட்டது என்னுடைய தவறு. அவளுக்கு எல்லாமே நான்தான் என்றிருந்தது. அவள் என்னவாக ஆகப்போகிறாள்? என் மனசாட்சிக்கு உறுத்தலாக இன்னுமொரு ஆள். நான் மிக மோசமானதையே கற்பனை செய்கிறேன், மிக மோசமானது சாத்தியமே. பாவம், இந்த மிருகங்களின் உலகத்தில் கைவிடப்பட்ட குழந்தை. அவளைக் கண்டுபிடிக்க எனக்கு உதவ ஒருவராலும் முடியாது. ஒருவராலும் முடியாது. ஏனெனில், யாருமே இப்போது எஞ்சியில்லை. (மீண்டும் பிளிறல்கள், கண்மூடித்தனமான ஓட்டங்கள், புழுதி மேகங்கள்) நான் அவற்றைச் செவிமடுக்க விரும்பவில்லை. நான் காதில் பஞ்சை அடைத்துக்கொள்ளப்போகிறேன். (அவன் காதில் பஞ்சை அடைத்துக்கொண்டு, கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துப் பேசுகிறான்.) அவற்றுடன் வாதித்து, அவற்றை வழிப்படுத்துவதைத் தவிர வேறு எந்தத் தீர்வுமில்லை. எதைக் கொண்டுதான் வழிப்படுத்துவது? இந்தப் பரிணாமத்தை மீண்டும் பழைய நிலைக்குத் திருப்பிக்கொண்டுவர முடியுமா? மீண்டும் பழைய நிலைக்கு வரக்கூடியவையா அவை? அது ஒரு பிரம்மப் பிரயத்தனம். என்னுடைய சக்திகளுக்கு அப்பாற்பட்டது. முதலில் அவற்றுடன் வாதித்து வழிக்குக்கொண்டுவருவதற்கு, அவற்றுடன் பேச வேண்டும். அவற்றுடன் பேசுவதற்கு, அவற்றின் மொழியை நான் கற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அவை என்னுடையதைக் கற்றுக்கொள்ள வேண்டுமா? ஆனால் நான் பேசுவது என்ன மொழி? என்னுடைய மொழி என்ன? பிரெஞ்ச்சா? அது பிரெஞ்ச்சாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், பிரெஞ்ச் என்பது என்ன? வேண்டுமானால் அதை பிரெஞ்ச் என்றழைக்கலாம். அதை யாரும் மறுக்கப்போவதில்லை. அதைப் பேசுவதற்கு நான் ஒருவன்தான் இருக்கிறேன். நான் என்ன சொல்கிறேன்? என்னை நானே புரிந்துகொள்கிறேனா, என்னை நானே புரிந்துகொள்கிறேனா? (அவன் அறையின் நடுப்பகுதியை நோக்கிச் சொல்கிறான்.) மேலும் டெய்ஸி என்னிடம் சொன்னது போல, அவற்றின் பக்கம் நியாயம் இருந்தால்? (கண்ணாடியை நோக்கித் திரும்புகிறான்.) மனிதன் விகாரமானவனல்ல, மனிதன் விகாரமானவனல்ல. (முகத்தைக் கையினால் தடவிக்கொண்டு தன்னைத் தானே பார்த்துக்கொள்கிறான்.) என்ன விசித்திரமாக விஷயங்கள்! அப்படியானால் என் தோற்றம் எதை ஒத்திருக்கிறது? எதை? (அவன் பீரோவை நோக்கி விரைகிறான். அதிலிருந்து புகைப்படங்களை எடுத்து அவற்றைப் பார்க்கிறான்.) புகைப்படங்கள்! யார் இவர்கள்? இந்த எல்லா மனிதர்களும் யார்? திரு. பாப்பியோன், அல்லது டெய்ஸியோ? அது போதார் அல்லது தியுதார் அல்லது*

*மூானோ? ஒருவேளை நானேதானோ? (மீண்டும் அலமாரியை நோக்கி விரைந்து அதிலிருந்து இரண்டு அல்லது மூன்று ஓவியங்களை எடுக்கிறான்.) ஆமாம்! என்னை எனக்கு அடையாளம் தெரிகிறது. இது நான்தான், இது நான்தான். (கோடியிலுள்ள சுவரின்மீது காண்டாமிருகங்களின் தலைகளுக்குப் பக்கத்தில் படங்களை மாட்டப்போகிறான்.) இது நான்தான், இது நான்தான். (அவன் அவற்றை மாட்டும்போது, அவை ஒரு முதியவர், ஒரு குண்டுப் பெண், இன்னொரு மனிதர் இவர்களின் படங்களாக இருப்பது நமக்குத் தெரிகிறது. இந்த ஓவியங்களின் விகாரத் தன்மை, மிக அழகாகிவிட்ட காண்டாமிருகங்களின் தலைகளுக்கு எதிரிடையாக இருக்கிறது. பெராஞ்சர் ஓவியங்களை நிதானமாகப் பார்த்து ரசிப்பதற்காகத் தள்ளி நிற்கிறான்.) நான் அழகாக இல்லை, நான் அழகாக இல்லை. (அவன் படங்களைக் கழற்றுகிறான். அவற்றை ஆத்திரத்துடன் தரையில் தூக்கி எறிகிறான். கண்ணாடியை நோக்கிச் செல்கிறான்.) அழகாக இருப்பது அவைதான். என்மீதுதான் தவறு. ஓ! அவற்றைப்போலிருக்க எவ்வளவு ஆசைப்படுகிறேன். எனக்குக் கொம்பில்லை, ஐயோ அது எவ்வளவு விகாரமாக இருக்கிறது. ஒரு தட்டையான நெற்றி, தொய்ந்து விழும் என் முக விகாரங்களைத் தூக்கி நிறுத்த எனக்கு ஒன்றிரண்டு கொம்புகளாவது தேவை. ஒருவேளை அதுகூட முளைக்கலாம். அப்போது எனக்கு மேலும் அவமானமாக இருக்காது. அவர்களுடன் நானும் போய்ச் சேர்ந்துகொள்ளலாம். ஆனால் அது முளைக்கவில்லையே. (அவன் தன் உள்ளங்கைகளைப் பார்த்துக்கொள்கிறான்.) என் கைகள் மெத்தென்று இருக்கின்றன. கரடுமுரடாகுமா அவை? (கோட்டைக் கழற்றுகிறான். சட்டையை அவிழ்க்கிறான். கண்ணாடியில் தனது மார்பை நிதானமாக உற்று நோக்குகிறான்.) எனது தோல் தளர்ந்து தொங்கியிருக்கிறதே. ஆ, ரோமம் நிறைந்த இந்த உடம்பு. அவர்களுடையதைப் போன்ற தடித்த தோலையும், அற்புதமான அந்தக் கறுத்த பச்சை நிறத்தையும், கௌரவமான ரோமமற்ற நிர்வாணத்தையும் அடைய எவ்வளவு ஆசைப்படுகிறேன். (பிளிறல் ஒலிகளைக் கேட்கிறான்.) அவர்களது பாடல்களில் ஒரு கவர்ச்சி இருக்கிறது. சற்றுக் கொடூரமாக இருந்தாலும் நிச்சயமான ஒரு கவர்ச்சி. என்னால் அவர்களைப்போல் செய்ய முடிந்தால். (அவற்றைப்போல் செய்ய முயல்கிறான்.) ஆஹ்ஹ்ஹ்! ஆஹ்ஹ்ஹ்!ப்ர்ர் ! இல்லை, அப்படியில்லை! இன்னொரு தடவை முயல்வோம், இன்னும் சத்தமாக. ஆஹ்ஹ்ஹ்! ஆஹ்ஹ்ஹ்!ப்ர்ர் ! இல்லை, இல்லை. அது அப்படியில்லை. எவ்வளவு பலஹீனமாக இருக்கிறது. எப்படி சுரத்தற்று இருக்கிறது. என்னால் பிளிற முடியவில்லை. நான் சும்மா ஊளையிடுகிறேன். ஆஹ்ஹ்ஹ்! ஆஹ்ஹ்ஹ்!ப்ர்ர் ! ஊளைகள் பிளிறல்கள் அல்ல. எப்படி என் மனசாட்சி உறுத்துகிறது? நான் அவற்றை சரியான சமயத்தில் பின்தொடர்ந்திருக்க வேண்டும். இப்போது காலம் கடந்துவிட்டது. ஐயோ! நான் பயங்கரமான ஒரு ஜந்து, நான் பயங்கரமாக ஒரு ஜந்து. ஐயோ, ஐயோ! ஒருபோதும், நான் காண்டாமிருகம் ஆகமாட்டேன், ஒருபோதும், ஒருபோதும். என்னால் இனிமேல் மாற முடியாது. நான் மாற ஆசைப்படுகிறேன். எவ்வளவு ஆசைப்படுகிறேன். ஆனாலும், என்னால் முடியவில்லை. என்னால் என்னையே பார்த்துக்கொள்ள முடியவில்லை. எனக்கு எவ்வளவு அவமானமாக இருக்கிறது. (கண்ணாடிக்கு முதுகைக் காட்டித் திரும்புகிறான்.) எவ்வளவு விகாரமாக இருக்கிறேன் நான். தனது தனித்தன்மையைக் காப்பாற்றிக்கொள்ள விரும்புபவர்களுக்குத் துயரம்தான். (தூக்கிவாரிப்போட்டு) சரி, போனால் போகட்டும். எல்லோருக்கும் எதிராக நான் என்னைத் தற்காத்துக்கொள்வேன். எனது துப்பாக்கி, எனது துப்பாக்கி. (காண்டாமிருகங்களின் தலைகள் பொருத்தப்பட்டுள்ள கோடிச் சுவருக்கு எதிராகக் கத்திக்கொண்டே திரும்புகிறான்.) எல்லோருக்கும் எதிராக நான் என்னைத் தற்காத்துக்கொள்வேன். நான்தான் கடைசி மனிதன். நான் இறுதிவரையில் அப்படியே இருப்பேன். நான் பணியமாட்டேன்.*